# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2046/3 – 2017 නොවැම්බර් මස 20 වැනි සඳුදා – 2017.11.20

**2046/3 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறிவீட்டுச் சட்டம்**

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2017ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 06 மாத காலப் பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2017 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழும் 2017.06.06. ஆந் திகதிய 2022/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாஜரின் (எச்.எஸ்.தலைப்பு இல. 1517.10.30 மற்றும் 1517.10.90) சம்பந்தமான உத்தரவு 2017 நவெம்பர் , மாதம் 21 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, நவெம்பர் 20.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| தொடர் இல. | எச். எஸ் . தலைப்பு | எச். எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 07.03 | 0703.10.10 | சிறிய வெங்காயங்கள் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| 2. | 08.04 | 0804.10.10 | பேரீச்சம் பழங்கள் - புதியவை | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 60.00 |
| | | 0804.10.20 | பேரீச்சம் பழங்கள் - சாறு இல்லாத காய்ந்த | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 60.00 |
| 3. | 08.06 | 0806.20 | திராட்சைப் பழங்கள் - உலர்த்தியவை | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 230.00 |
| 4. | 09.09 | 0909.31 | நற்சீரகம்- நசுக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 162.00 |
| | | 0909.32 | நற்சீரகம்- நசுக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 162.00 |
| 5. | | 0909.61.20 | பெருஞ்சீரகம் | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 162.00 |
| 6. | 15.17 | 1517.10.30 | மாஜரின் 80% அல்லது அதற்கு மேற்பட்ட கொழுப்புகளுடன் | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 215.00 |
| | | 1517.10.90 | பிற | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 315.00 |

12-95